போக்க ஏதுவாக இருக்குமே, அதை அரசு பரிசீலனை செய்து, ஊராட்சி ஒன்றிய சுகாதார நிலையத்தில் ஒரு சித்த வைத்திய பிரிவு ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட சித்த மருத்துவ மருந்தகங்களை ஏற்படுத்துவதில ஒன்றியங்கள் ஆர்வத்தோடு முன்வரவேண்டுமென்றுதான் அரசாங்கம் கேட்டுக்கொள்ள முடியும். அரசாங்க ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூன்று வகை யான பணிகளைச் செய்கின்றன. ஒன்று நோய்த் தடுப்பு முறைகள், இரண்டாவது சிகிச்சை முறைகள், மூன்ருவது குடும்ப நலத் திட்டம், ஆக, இந்த மூன்ருேடு சேர்த்து மற்றவைகளை நிர்வகிப்பதைவிட, தனியாகச் சித்த மருந்தகங்களை அங்கு அமைக்க அவர்கள் முன்வருவார்களாளுல், அரசாங்கமும் அவைகளுக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு ஒத்துழைப்பு தரும்.

பள்ளப்பட்டி மருத்துவமனையில் பரிசோதனை நிலையம்

*480 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளப்பட்டி (அரவாக்குறிச்சி தொகுதி) அரசினர் மருத்துவ மனையில் பரிசோதனை நிலையம் (Clinical Laboratory) ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ): பள்ளப்பட்டி அரசினர் மருத்துவ மனையில் ஒரு பரிசோதனை நிலையம் அமைக்க சமீபத்தில் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அமைச்சரவர் கள் அங்கே தரப்பட்டு இருக்கிறது என்று சொன்னது மகிழ்ச்சி தருகிறது. அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு எக்ஸ்-ரே கருவிகள் பொருத்தப்படுமா என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தருவார் களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எக்ஸ்-ரே ஆராய்ச்சிப் பிரிவுகளும் வருமா என்று கேட்கிருர்கள். லேபரட்டரிகள் ஏற்படுத்தப்படுவதற் கான கட்டிடத்தை ஒட்டிய கேள்வி இது. அந்தக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுமாளுல், தொடர்ந்து மற்றவைகளும் நிறைவேற்றப்படும் என்று நான் நம்புகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, அரசினர் மருத்துவ மனைகளில் பரிசோதனைப் பிரிவு அமைக்க நமது அரசு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறதா ? இந்த முறையில் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் அரசு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்குள்ளவர்களே, ரூ. 35,000 வசூல் செய்து அரசுக்குத் தந்திருக்கிருர்கள். இதே முயற்சியை அவர்களும் செய்யலாம்.

மதுரையில் பார்மஸிஸ்ட் பயிற்சி

*481 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் D. பார்மஸி பயிற்சிக்கு ஆண்டுதோறும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா ?

(இ) ஆம் எனில், எம்முறையில் தேர்வு நடத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றின் பொது விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ள, பள்ளி இறுதித்தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் முழுமையாக தகுதியைக் கொண்டு, முறையாக அமைக்கப்பட்ட குழுவினுல் பார்மஸி பயிற்சிக்கு நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும் இந்திய மருத்துவக் கழகத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்ட, மேற்படி தேர்வுகளுக்குச் சமமான வேறு தேர்வில் வெற்றி பெற்றவர்களும் கூட மேற்படி பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர். பள்ளி இறுதித் தேர்வில் தவறியவர்கள் அல்லது பள்ளி இறுதிப் படிப்பினை முடித்தவர்கள் மேற்படி பயிற்சிக்குத் தேர்வு பெற தகுதியுடையவரல்லர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இங்கு கேட்டிருக்கக்கூடிய கேள்வி D. பார்மஸியைப் பற்றி. டி. பார்மஸி சம்பந்தப்பட்ட தேர்வுக்கான இந்தத் தகுதிகளா ? அல்லது பி. பார்மஸி ரெசர்ச் பிரிவில் சேரக் கூடியவர்களுக்குத் தகுதி இதுவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி தமிழிலே அமைந்திருக்கிறது. திரு. காவேரிமணியம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிருர்கள். இது மதுரையில் அரசினர் மருத்துவக் கல்லூரியில் டி. பார்மஸி பயிற்சிக்கு என்று கேட்கப்பட்டிருப்பதால், பி. பார்மஸிக்கு என்று சொல்லப்படாத காரணத்தினுல், டிப்ளமா இன் பார்மஸி என்று எடுத்துக் கொண்டு டிப்ளமோ பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். ஓராண்டு பயிற்சியாக இருக்கிற டி. பார்மஸியில் சேருகிறவர்கள் பிறகு பி. பார்மஸியில் சேருவதற்குத் தகுதி பெற்றிருக்கிருர்கள் என்று, நான் நினைவிலிருந்து சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த வகுப்பானது மதுரையிலும், சென்னையிலும் மட்டும்தான் இப்பொழுது இருக்கிறது. மதுரையில் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிருர்கள், சென்னையில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிருர்கள்?